# 27

# நபி r அவர்களின் மதீனா வாழ்க்கை

நபி r அவர்களின் வாழ்க்கையை இரண்டு கால கட்டங்களாகப் பிரித்து நோக்கலாம்.

1. ஹிஜ்ரத்திற்கு முற்பட்ட மக்கா வாழ்க்கை
2. ஹிஜ்ரத்திற்கு பிற்பட்ட மதீனா வாழ்க்கை

இரண்டாவது பகுதி இஸ்லாமிய வரலாற்றில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய கால கட்டமாகும்.



மக்காவில் முஸ்லிம்கள் குறைந்த தொகையினரே வாழ்ந்தனர். அப்போது அவர்கள் காபிர்களின் கொடுமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக இருந்தனர். இஸ்லாமிய பிரசாரப் பணிக்கு பல தடைகள் ஏற்பட்டிருந்தன. மதீனாவிலோ இதற்கு மாறான சூழ்நிலை காணப்பட்டது.

மதீனா மக்காவுக்கு வடக்கே 450 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஒரு விவசாயப் பூமியாகும். இது முதலில் யத்ரிப் எனும் பெயரால் அழைக்கப் பட்டது. இங்கு அவுஸ், கஸ்ரஜ் என்ற இரு கோத்திரங்கள் வாழ்ந்து வந்தன. கூடவே யூதர்களும் வாழ்ந்தனர். இவ்விரு கோத்திரங்களுக்கு மத்தியில் நல்லுறவு காணப்படவில்லை. அவர்களுக்கிடையில் யூதர்கள் சண்டையை மூட்டிக் கொண்டிருந்தமையே இதற்கான காரணமாகும்.

ஒரு முறை க.்.பாவைத் தரிசிக்கச் சென்ற மதீனாவாசிகள் சிலர் நபி r அவர்களை இரகசியமாக சந்தித்தனர். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இவர்கள் மூலமாக மதீனாவில் படிப்படியாக இஸ்லாம் பரவ ஆரம்பித்தது. பின்னர் நபி r அவர்களை மதீனாவுக்கு வரும்படி அவர்கள் அழைப்புவிடுத்தனர். அல்லாஹ்வின் உத்தரவின்படி நபி r அவர்கள் மதீனா நோக்கிப் புறப்பட்டார்கள்.

மதீனா மக்கள், நபி ﷺ அவர்களை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இது இஸ்லாமிய வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.



ஆரம்பத்தில் யத்ரிப் என்று அழைக்கப்பட்ட இந்நகரம் நபியவர்களின் ஹிஜ்ரத்திற்குப் பின்னர் 'மதீனதுன் நபி' என பெயர் பெற்றது. மதீனா என்பதன் கருத்து நகரம் என்பதாகும். நகரத்தில் மக்கள் அதிகமாக வசிப்பர். இதனால் அங்கு சமூகமும் அரசாங்கமும் காணப்படும். நபி ﷺ அவர்கள் மதீனாவுக்குச் சென்றதும் முதலில் சமூக அமைப்பைக் கட்டியெழுப்பினார்கள்.

- முஸ்லிம் சமூகத்தின் மத்திய நிலையமாக அமையும் வகையில் மஸ்ஜிதுன் நபவியை நிர்மாணித்தார்கள்.
- மக்காவிலிருந்து அங்கு சென்ற முஹாஜிர்களையும் மதீனாவாசிகளான அன்ஸாரீன்களையும் சகோதரர் களாகப் பிணைத்தார்கள்.
- பல வருட காலமாக சண்டையிட்டுக் கொண்டிருந்த அவுஸ்-கஸ்ரஜ் கோத்திரத்தவர்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தினார்கள்.
- மதீனாவில் வாழ்ந்த யூதர்களுடனும் மதீனாவைச் சூழவுள்ள ஏனைய கோத்திரங் களுடனும் சமாதான உடன்படிக்கைகளை செய்துகொண்டார்கள்.

இதன் பயனாக நபி ﷺ அவர்களின் தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு வாழும் ஒரு சமூகம் உருவானது. சுதந்திரமாக மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் கூட்டான இபாதத்துகள் விதியாக்கப்பட்டன.

**அவ்வாறான சில இபாத்கள்**

ஜுமுஆ, ஜமாஅத் தொழுகைகள் விதியாக்கப்பட்டன.

தக்வாவை வளர்க்க நோன்பு கடமையாக்கப்பட்டது.

ஏழைகளுக்கு உதவ ஸகாத் கடமையாக்கப்பட்டது.

சமூகம் தொடர்பான ஒழுக்கங்கள் விதியாக்கப்பட்டன.

சமூகத்துக்குத் தேவையான சட்டவிதிகளும் நடைமுறைகளும் வகுத்துக் கொடுக்கப்பட்டன.

சமூகத்தை பாதுகாப்பதற்காக ஒரு அரசாங்கம் உருவாக்கப்பட்டது.

இதனால் சிறந்த தனிமனிதர்கள் உருவானார்கள். நல்ல குடும்பங்கள் தோற்றம் பெற்றன. குற்றம் செய்யாத, குற்றம் செய்யத் தயங்கிய, குற்றம் செய்தால் உடனே மன்னிப்போ, தண்டனையோ பெற்றுக்கொள்ள விரும்பிய ஒரு நல்ல சமூகம் உருவாக்கப்பட்டது. அங்கு எல்லோரும் சகோதரர்களாகக் காணப்பட்டார்கள். உயர்ந்தவர், தாழ்ந்தவர், அறபி, அஜமி,

உள்நாட்டவர்-வெளிநாட்டவர் என்ற வேறுபாடு நோக்கப்படவில்லை. அவ்வாறு வேறுபாடு காட்டியவர்களை நபியவர்கள் கண்டித்தார்கள். அவ்வாறே எல்லோருக்கும்

சமஉரிமை வழங்கப்பட்டது. மற்றவர்களின் உரிமையில் தலையிடுபவர்கள் அல்லது மற்றவர்களுக்குரிய உரிமையை வழங்காதவர்கள் கண்டிக்கப்பட்டார்கள். சிலபோது தண்டிக் கப்பட்டார்கள். குர்ஆன், ஸுன்னா மூலம் சமூகத்துக்கான சட்டங்கள் வரையறுக்கப்பட்டன. அவையாவன:

- ✶ குடும்பவியல் சட்டங்கள்
- ✶ குற்றவியல் சட்டங்கள் - ஜினாயத்
- ✶ நிகாஹ்-தலாக் தொடர்பான சட்டங்கள் - முனாகஹாத்
- ✶ வாரிசுரிமை அல்லது பாகப் பிரிவினை தொடர்பான சட்டங்கள் - வராஸத்
- ✶ கொடுக்கல்-வாங்கல் தொடர்பான சட்டங்கள் - முஆமலாத்

சட்டங்களை பாதுகாத்தல் நடைமுறைப்படுத்தல் தண்டனை வழங்கல் முதலிய பணிகளை அரசாங்கம் செய்து வந்தது.

நபி r அவர்கள் உருவாக்கிய சமூகத்தையே நாங்கள் ஸஹாபாக்கள் சமூகம் என அழைக்கின்றோம். அல்லாஹ் அல்குர்ஆனின் மூலம் வழங்கிய போதனைகளை நடைமுறைப்படுத்திக் காட்டியவர்கள் அவர்களே ஆவர். அவர்கள் தாம் முஸ்லிம் சமூகத்தின் முன்னோடிகள்; இன்றுவரை முஸ்லிம் சமூகம் வாழ்ந்து வருவதற்கு அடித்தளமாக அமைந்தவர்கள்.

ஆகவே நாமும் அந்த சமூகத்தின் முன்மாதிரிகளைப் பின்பற்றி நபி r அவர்களின் அன்பைப் பெற்றுக்கொள்ள முயல்வோமாக.

**பயிற்சி:**

1. மதீனாவில் ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப நபிகளார் மேற்கொண்ட முயற்சிகள் யாவை?
2. மதீனா சமூகத்தில் காணப்பட்ட நல்ல பண்புகளை எடுத்துக் காட்டுக.
3. மதீனாவில் கடமையாக்கப்பட்ட கடமைகள் எவை?